ISSN:2582-9599



# தமிழர் கண்ட நல்லறமும் வேதாத்திரியமும்

திருமதி. பா.மகேசுவரி
உதவிப் பேராசரியர், தமிழ்த்துறை
வேளாளர் மகளிர் கல்லூரி
திண்டல், ஈரோடு-638012
மின்னஞ்சல்: cmaheswari79@gmail.com

36

**ஆய்வு நோக்கம் – தமிழர்கள் வாழ்வில் கடைபிடித்தத் தத்துவங்களையும் வாழ்வியல் சிந்தனைகளையும் எடுத்துரைத்தல்**

**திறவுச்சொல் – வேதாத்திரியம்- ஞானகளஞ்சியம் – பசிப்பிணி மருத்துவர் – அமிழ்தம் – மனசாட்சி -**

**ஆய்வுச் சுருக்கம்**

உலகமொழிகளுள் தலைமையான மொழி தமிழ்மொழி. எல்லா மொழிகளுக்கும் தாய்மையான மொழி. அம்மொழியில் உலக மக்கள் அனைவரும் கடைபிடித்து ஒழுக வேண்டிய நற்பண்புகள் நிறைந்து காணப்படுகின்றன. ஒரு மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்றால் உயர்ந்த சிந்தனையோடும் நல்லறங்களை மேற்கொண்டும் வாழ வேண்டும். அம்மனிதனை நல்வழிப்படுத்த இலக்கியங்கள் துணை செய்கின்றன. சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் தமிழர் தம் வாழ்வில் மேற்கொண்டிருந்த உயர்ந்த சிந்தனைகளை நமக்கு எடுத்துக்காட்டுகின்றன. அவற்றுள் இன்றியமையாதவற்றை இருபதாம் நூற்றாண்டின் மக்கள் சிந்தனைவாதியாக அவதரித்த மகான் வேதாத்திரி மகரிஷி அவர்கள் கூறிய கருத்துக்களோடு ஒப்புமைப்படுத்திக் காட்டுவதாக இவ்வாய்வு அமைகின்றது.

**முன்னுரை**

பண்டையத் தமிழர்கள் அறச்சிந்தனையோடு வாழ்ந்தவர்கள் அறத்தின் காவலர்களாக விளங்கிய சான்றோர்கள் அள்ளி வழங்கிய அறிவுரைகள் சங்க இலக்கியங்களுள் நிறைந்து காணப்படுகின்றன. அவற்றுள் இன்றியமையாதவற்றை அறிவியல் யுகம் என்று சொல்லப்படுகின்ற இக்காலக்கட்டத்தில் தோன்றிய மகான் வேதாத்திரி மகரிஷி அவர்கள் கூறிய வேதாத்திரியக் கருத்துக்களோடு ஒப்புமைப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

**உலக மக்கள் அனைவரும் ஒன்றே**

உலக மக்கள் அனைவரும் (நாடு, இனம், மொழி, காயம் எனப் பல்வேறு பிரிவுகளில் பிரிந்தாலும் எல்லா ஊர்களும் தம் சொந்த ஊரே எல்லா நாடும் தம் சொந்த நாடே என்ற உயர்ந்த மனம் படைத்திருந்தனர் பண்டைய தமிழர்கள். இத்தகைய சிந்தனையைக் கணியன் பூங்குன்றனார்

**“யாதும் ஊரே யாவரும் கேளிர்**
**தீதும் நன்றும் பிறர்தர வாரா”** [1]

என்று குறிப்பிடுகின்றார்.

சங்க கால மக்கள் சாதி, சமய பேதம் ஏதுமில்லாமல் நில அடிப்படையில் தனது வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொண்டனர். காலம் செல்லச் செல்ல அந்நியர் படையெடுப்பாலும் ஆட்சி மாற்றத்தாலும் மக்களிடையே சாதி, சமய, பேதங்கள் உருவாகி இழப்புகளும் இழுக்குகளுமே தோன்றின. அதனை வேதாத்திரி மகரிஷி அவர்கள்,

**“மொழி, தொழில், நாடு, இனம் மதம் இவற்றால்**
**முன்னோர்கள் பிரித்த முறை சாதியாச்சுரி**
**வழிவழியே தொடர்ந்துவந்த சாதிப்பற்று**
**வாழ்வினிலே விளைத்தவலாம் துன்மன்றோ?**
**அழிவின்றி ஆக்கவில்லை என்னும்**
**…………………………………………………………………………………………..”** [2]

என்று தனது ஞானக்களஞ்சியம் என்னும் நூலில் சாதியால் மதத்தால் இன்று மக்கள் துன்பப்பட்டும் கொண்டிருக்கின்றனர். இத்துன்பம் களைய வேண்டும் என்றால், “உலகுக்கு ஓராட்சி முறை வேண்டும்” என்கிறார்.

சங்க கால கணியன் பூங்குன்றனார் கூறிய “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற உண்மை இக்காலத்திற்குப் பயன்பட வேண்டுமென்றால் “உலகுக்கு ஓராட்சி முறை” வேண்டும் என்கிறார் மகரிஷி அவர்கள்.

**உதவி செய்து வாழ்தல்**

உலகில் வாழும் மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் ஒத்தும் உதவியும் வாழ வேண்டும். உடையோர் இல்லோர்க்குக் கொடுத்து உதவுவது கடன் என வற்புறுத்தினர் புலவர் பெருமக்கள். அத்தகையோரைப் “பசிப்பிணி மருத்துவர்” எனப் பாராட்டினர். சுவைக்கு இனியதாக உள்ள நெய்யுடைய அடிசிலை பிறர்க்குக் கொடுக்காமல் தாமே இரக்கமின்றி உண்பாரை புலவர் உலகம் பழித்தது.

ஈகை செய்கின்ற பொழுது புகழுக்கும் மறுமை இன்பத்தையும் நோக்கமாகக் கொண்டு செய்யக் கூடாது என்பதை, முடமோசியார் எனும் புலவர்,

**“இம்மைச் செய்த்து மறுமைக்கு ஆம்**
**எனும் அறவிலை வாணிகன்ஆய் அலன்”** [3]

எனப் பேகனைப் பாராட்டும் பொழுது,

**“எத்துணையாயினும் ஈதல் நன்றெனை**
**மறுமை நோக்கின்றோ அன்றே**
**பிறர் வறுமை நோக்கின்று**
**அவன் கைவண்ணமே”** [4] என்று பாராட்டுகின்றார்.

இந்திரலோகத்தில் இருக்கக்கூடிய அமிழ்தம் கிடைத்தாலும் பிறரோடு பகுத்துண்ண வேண்டும் என்கிறார் இளம்பெருவழுதி இதனை,

**"உண்டா லம்ப இவ்வுலகம் இந்திரர்**
**அமிழ்தம் கிடைப்பதாயினும் தமியர்**
**உண்டனும் இலமே**
**……………………………………………………………………………………………" 5**

என்ற பாடலடிகளால் அறியலாம்.

மகரிஷி அவர்கள் பிறருக்கு உதவி செய்து வாழ வேண்டும் என்ற நற்சிந்தனையை "இரண்டொழுக்கப் பண்பாடாக" மக்களுக்கு வழங்கியுள்ளார்.

**"நான் எனது வாழ்நாளில் யாருடைய உடலுக்கும்**
**மனதுக்கும் துன்பம் தர மாட்டேன்.**
**துன்பப்படுவோர்க்கு என்னால் முடிந்த**
**உதவிகளைச் செய்வேன்" 6**

என்று இரண்டொழுக்கப் பண்பாட்டை தரணிக்குக் கொடுத்து சங்ககால மக்களின் வாழ்வை இக்கால மக்களும் மேற்கொண்டு வாழ்வில் உயர்ந்து விளங்க வேண்டும் என்கிறார்.

**கடமை**

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வில் கடமையைக் கைக்கொண்டு வாழ வேண்டும். பண்டைய மக்கள் தன் கடமைகளில் தவறாது வாழ்வை நடத்தினர் என்பதை,

**"ஈன்று புறந்தருதல் என்தலைக் கடனே**
**சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே**
**வேல் வடித்துக் கொடுத்தல் கொல்லற்குக் கடனே**
**நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே**
**ஒளிறுவாய் அரும்சமம் முருக்கிக்**
**களிறு எறிந்து பெயர்தல் காளைக்குக் கடனே" 7**

என்ற பொன்முடியார் பாடலால் அறியலாம். தாய், தந்தை, வேந்தன், கொல்லன், காளை ஆகியோர் கடமைகள் என்ன என்பதை எடுத்து மொழிகின்றன.

இக்கருத்தையே மகரிஷி அவர்களும் தனது ஞானக்களஞ்சியத்தில், ஒவ்வொரு மனிதனும் கடமையை உணர்ந்து காலத்தில் செய்திட்டால் உடம்புக்கும் நல்லது. உள்ளமும் அமைதியாகும் என்பதை,

**"உடல்நலம் அறிவின் உயர்வுமே பெருநிதி**
**கடமையின் சிறப்பே களங்கமிலா வாழ்வு" 8**

என்று குறிப்பிடுகின்றார்.

**நன்றி மறவாமை**

ஒருவர் தன் வாழ்நாளில் தனக்கு செய்த நன்மையை நினைத்து செய்நன்றி உடையவர்களாகத் திகழ வேண்டும். திருவள்ளுவர் அதற்கென தனியதிகாரமே வகுத்துள்ளார்.

**“நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது**

**அன்றே மறப்பது நன்று”** [9] என்றும்,

**“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு”** [10]

என்றும் நன்ற மறவாமையைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

புறநானூற்றில் ஒரு பாடல் செய்நன்றியைப்பற்றி

**“ஆன்முலை யறுத்த அறனில் லோர்க்கும்**

**மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்**

**பார்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்**

**வழுவாய் மருங்கின் கழுவாயும் உளவென ஒருவன் செய்தி கொன்றோக்கு உய்தி இலலென**

**அறம்பா டிற்றே ஆயிழைக் கணவ”** [11]

என்று குறிப்பிடுகின்றது. ஆகவே மக்கள் என்றென்றும் செய்நன்றி உடையவர்களாகத் திகழ வேண்டும் என்பதைச் சங்க இலக்கியங்கள் விளக்குகின்றன. அதேபோல வேதாத்திரி மகரிஷி அவர்கள் ஒரு மனிதனின் நன்றி மறந்த செயலைக் கூறும்போது

**“ஐயறிவு மாடெனினும்**

**அதன் கன்றுக்கு உணவுட்டி**

**அன்போடு வளர்ப்போர்க்கோர்**

**அளவு பால் தந்து உதவும்**

**ஆறறிவு மனிதனோ**

**ஆதன் கன்றைப் பட்டினியால்**

**அழித்து அதிகம் பால்பெறும்இவ்**

**அநியாயம் ஒழிவது எப்போது?** [12]

என்று ஐயறிவு மாட்டுக்கும் ஆறறிவு கொண்ட மனிதனுக்கும் ஒப்பிட்டு நன்றி மறந்த செயலைக் குறிப்பிடுகின்றார். மேலும்

**“நன்றியுணர்வும் கடமையுணர்வும் ஒன்றிணைத்து**

**நலம்விளைக்கும் செயல்களையே விளைவறிந்து ஆற்ற”** [13]

என்று நன்றியுணர்வோடும் இருக்க வேண்டும் என்கிறார்.

**உயரந்த செல்வம்**

இன்று இருந்து நாளை மடியும் பொருட்செல்வத்தைக்காட்டிலும் என்றும் நிலைத்து நிற்கும் அறச்செல்வமான அருட்செல்வமே செல்வம் என்று உணர்ந்த தமிழர் அதிகார தோரணையிலே பேசுவதும், விரைந்து செல்லும் வாகனங்களிலே ஏறிச் செல்வதும் செல்வம் அன்று; தாம் செய்த செயலின் நல்ல பயனையே சான்றோர் செல்வம் என்று சாற்றுவர்.

தன்னைக் கண்டவர்களின் துன்பம், தன்னைக் கண்டவுடனே அஞ்சி ஓடும்படியான தன்மையுடன், அவர்களிடம் இரக்கம் காட்டுவதாகிய செல்வமே சிறந்த அழியாத செல்வமாகும்

என்பதை,

**"நெடிய மொழிதலும், கடிய ஊர்தலும்**
**செல்வம் அன்று; தம்செய் வினைப்பயனே**
**சான்றோர் செல்வம் என்பது; சேர்ந்தோர்**
**புன்கண் அஞ்சும் பண்பின்**
**மென்கண் செல்வம், செல்வம் என்பதுவே."** [14]

என்ற சங்கப்பாடல் விளக்குகின்றன. வேதாத்திரி மகரிஷி அவர்கள் உயர்ந்த செல்வம் எது என்பதை சங்க இலக்கியத்தின் அடியொற்றியே

**"உனக்கும் நல்லதாய் ஊருக்கும் நல்லதாய்**
**நினைப்பதும் செய்வதும் நித்தியக்கடன்"** [15]

என்று தனது ஞானக்களஞ்சியத்தில் மொழிகின்றார்.

**உயர்ந்த ஒழுக்கம்**

சமுதாயம் என்பது தனிமனிதர்களின் சேர்க்கையே. சமுதாயத்தின் வாழ்வும் தனிமனிதனின் வாழ்வும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. தனியொரு மனிதன் இளமைப்பொருந்தியவனாக இருக்கவேண்டும் என்றால் அவருக்கு வாய்த்த மனைவி மாண்புடையவளாக விளங்க வேண்டும்; மக்கள் அறிவு நிரம்பியவர்களாக இருக்க வேண்டும். ஏவல் செய்யும் மக்கள் குறிப்பறிந்து செய்ய வல்லவர்களாக இருக்க வேண்டும். மக்களைக் காக்கும் அரசர்கள் நல்லாட்சி புரிய வேண்டும். இவை எல்லாவற்றுக்கும் மேலாக கல்வி கேள்விகளில் சிறந்த சான்றோர்கள் பலர் நாட்டில் வாழவேண்டும் என்பதை சங்க இலக்கியமான புறநானூற்றுப்பாடலில் பிசிராந்தையார்

**"யாண்டு பலவாக நரையில வாகுதல்**
**யாங்கு ஆகியர் என வினவுதிர் ஆயின்**
**மாண்ட என் மனைவியோடு மக்களும் நிரம்பினர்**
**………………………………………………….**
**சான்றோர் பலர் யான் வாழும் ஊரே"** [16]

என்று குறிப்பிடுகின்றார். வேதாத்திரி மகரிஷி அவர்கள் திருவள்ளுவரின் கருத்தை அடியொற்றி உயிரைவிட ஒழுக்கம் மேலானது என்றும் அழுக்காறு பேராசை சினம் கடுஞ்சொல் உயிருக்கு இன்னா செய்யும் நோன்பு என்ற ஐந்து பெரும் பழிச்செயல்களை விளக்கியும் நல்லோர்களைப் பின்பற்றி நடக்க வேண்டும் என்று அறிவுறுத்துகின்றார்.

**மனசாட்சி**

ஒருவர் தன்னுடைய மனம் அறிந்து தீமை செய்பவர்கள் பழிக்கத்தக்கவர்கள். இதனைக் கலித்தொகை

**"நெஞ்சறிந்த கொடியவை மறைப்பினும் அறிபவர்**
**நெஞ்சத்திற்கு குறுகிய கரியில்லை"** [17]

என்று குறிப்பிடுகின்றது.

சங்க இலக்கியம் மனம் அறிந்து தீமை செய்பவர்கள் பழிக்கத்தக்கவர்கள் என்று குறிப்பிட வேதாத்திரி மகரிஷி அவர்கள் மனம் தூய்மை பெற வேண்டும். மனம் தூய்மைப்பெறுவதற்கு அகத்தாய்வு அகத்தவம் இரண்டையும் செய்ய வேண்டும் என்றும் அப்பொழுதுதான் மனதிற்குள் இருக்கக்கூடிய மயக்கம் போகும் என்பதை

**“மருள்போக்கி மக்கள் ஒத்துதவி வாழ**
**மனத்தூய்மை வினைத்தூய்மை பெற்று உள்ளத்தில்**
**இருள்போக்கும் அகத்தவமும் அகத்தாய்வும் பின்**
**இனிதாக்கும் குண்டலினியோகம் கற்பீர்”**

என்று தனது பாடல் வரிகளில் குறிப்பிடுகின்றார்.

**முடிவுரை**

“தமிழர் கண்ட நல்லறமும் வேதாத்திரியம்” என்ற இக்கட்டுரையில் சங்க இலக்கியங்கள் காட்டும் உயர்ந்த பண்புகளை இருபதாம் நூற்றாண்டின் தத்துவஞானியான வேதாத்திரி மகரிஷி அவர்கள் அருளிய வேதாத்திரியம் எவ்வகையில் கைக்கொண்டு உள்ளது என்பதை விளக்குவதாக இவ்வாய்வு அமைந்துள்ளது.

**அடிக்குறிப்புக்கள்**

1. புறநானூறு பா.192 பக். 464
2. ஞானக்களஞ்சியம் பா.200
3. புறநானூறு பா.134
4. புறநானூறு பா.141
5. புறநானூறு பா.182
6. இரண்டொழுக்கப்பண்பாடு
7. புறநானூறு பா.312
8. ஞானக்களஞ்சியம் பா.401
9. திருக்குறள் 108
10. புறநானூறு பா.34
11. ஞானக்களஞ்சியம் பா.195
12. ஞானக்களஞ்சியம் பா.410
13. நற்றிணை பா. 210
14. ஞானக்களஞ்சியம் பா.151
15. புறநானூறு பா.191
16. கலித்தொகை பா.111
17. ஞானக்களஞ்சியம் ஆத்திச்சூடி பக்.163

**துணைநூற்பட்டியல்**

1. முனைவர் கு.வெ. பாலசுப்பிரமணியம், 2014, புறநானூறு (மூலமும் உரையும்) நியுசெஞ்சுரி புக் கவுஸ், அம்பத்தூர், சென்னை.
2. முனைவர் இரா. சந்திரசேகரன், 2005, அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி பன்முக ஆய்வு, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
3. முனைவர் அ. தட்சிணாமூர்த்தி, 2021, ஐந்திணைப்பதிப்பகம், சென்னை.
4. பரிமேலழகர் உரை, 1978, திருக்குறள், பு+ம்புகார் பிரசுரம், சென்னை.
5. தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி (பகுதி-1), 2022, உலக சமுதாய சேவா சங்கம், வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
6. தத்துவஞானி வேதாத்திரி மகரிஷி (பகுதி-2), 2021, உலக சமுதாய சேவா சங்கம் வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.
7. தமிழறிஞர் சாமி.சிதம்பரனார், 2011, தமிழர் வாழ்வும் பண்பாடும், சாரதா பதிப்பகம், சென்னை.